Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935



## கலைஞர் வசனங்களை பேசி வருபவர்; பெரியாராகவே வாழ்ந்து வருபவர் சத்யராஜ் சத்யராஜுக்கு 'கலைஞர் விருது' வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி




சென்னை, 24 நவம்பர் 2024: முத்தமிழ் பேரவை 50ஆம் ஆண்டு பொன்விழாவையொட்டி சென்னையில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டார். நடிகர் சத்யராஜுக்கு 'கலைஞர் விருது', திருப்பாம்புரம் டி.கே.எஸ்.மீனாட்சி சுந்தரத்துக்கு 'ராஜரத்னா விருது', கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினிக்கு 'இயல் செல்வம் விருது', முனைவர் காயத்ரி கிரிஷுக்கு 'இசைச் செல்வம் விருது', திருக்கடையூர் டி.எஸ்.உமாசங்கருக்கு 'நாதஸ்வரச் செல்வம் விருது', சுவாமிமலை சி.குருநாதனுக்கு 'தவில் செல்வம் விருது', முனைவர் தி.சோமசுந்தரத்துக்கு 'கிராமியக் கலைச் செல்வம் விருது', பார்வதி ரவி கண்டசாலாவுக்கு 'நாட்டியச் செல்வம் விருது' ஆகியவற்றை வழங்கி கௌரவித்தார்.

தொடர்ந்து முத்தமிழ்ப் பேரவையின் பொன்விழா ஆண்டு மலராக எழுத்தாளர் துமிலன் எழுதிய 'திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினத்தின் வாழ்க்கை சரிதம்' நூலை முதலமைச்சர் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை டி.என்.ராஜரத்தினத்தின் புதல்வி வனஜா சுப்ரமணியம் பெற்றுக்கொண்டார்.

பின்னர் விழாவில் முதலமைச்சர் பேசியதாவது, முத்தமிழ்ப் பேரவை தொடங்கிய காலத்தில் இருந்து ஆண்டுதோறும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நேரத்தை ஒதுக்கி, தனது கடமையாக கருதி கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கி வந்தார். அவர் வழியிலே நானும் எனது கடமையை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறேன். இயல், இசை, நாடகத்தில் முத்திரை பதித்து முத்தமிழாக வாழ்ந்தவர் கருணாநிதி. முத்தமிழ்ப் பேரவை வழங்கும் இந்த விருதானது, கருணாநிதியே வழங்கும் விருது மாதிரி.

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதேன் நம் முழக்கம்; இசையிலும் தமிழ் ஒலிக்க வேண்டும்; செழிக்க வேண்டும்.

இடையில் சாதி, மதம் என்ற பெயரில் அந்நிய மொழிகள் மூலம் பண்பாட்டு தாக்குதல்கள் நடந்தாலும் எல்லாவற்றையும் தாண்டி தமிழும், தமிழினமும், தமிழ்நாடும் நின்று நிலைக்க தமிழின் வலிமையும், பண்பாட்டின் சிறப்பும் தான் காரணம். எந்த ஆதிக்கத்தையும் வெல்லும் ஆற்றல் மொழிக்கும், கலைக்கும் உண்டு. அந்த இரண்டையும் கண்போல் காப்போம் என தெரிவித்தார்.

கலைஞர் வசனங்களை பேசி வருபவர்; பெரியாராகவே வாழ்ந்து வருபவர் சத்யராஜ். கலைஞர்பேசினால் அதில் இசை நயம் இருக்கும்; அவர் எழுத்தை வாசித்தால் இசைபோல் இருக்கும். மனோகரா வசனம் இசைபோல் இருக்கும் என்பதை என் மகள் செந்தாமரை நாட்டிய அரங்கேற்றத்தில் இளையராஜா பாடிய போது ரசித்தேன் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி அடைந்தார்.

## எப்படியாவது நம்ம கூட்டணி உடையாதா விரிசல் விழுந்து விடாதா என்று எடப்பாடி காத்து கிடக்கிறார் - துணை முதல்வர் உதயநிதி



சென்னை, 24 நவம்பர் 2024: நாகையில் நடைபெற்ற திமுக மாநில மீனவரணி துணை செயலாளர் மனோகரன் இல்லத் திருமண விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு திருமணத்தை நடத்தி வைத்தார். தொடர்ந்து விழாவில் பேசிய அவர், திமுக ஆட்சியில் பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருவதாகக் கூறினார்.

கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் பயன் அடைந்து வருவதாகவும், இதனைப் பார்க்கும் போது எடப்பாடி பழனிசாமி வயிற்று எரிச்சல் அடைவதாகவும் விமர்சித்தார். மேலும் அதிமுக கூட்டணி பேரம் பேசும் கூட்டணி என்றும், திமுக கூட்டணி வெற்றிக் கூட்டணி என்றும் துணை முதலமைச்சர் தெரிவித்தார்.

எப்படியாவது நம்ம கூட்டணி உடையாதா விரிசல் விழுந்து விடாதா என்று காத்து கிடக்கிறார். இந்த முறையும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வெற்றிக்கூட்டணியை முதல்வர் ஸ்டாலின் அமைப்பார். வெற்றி கூட்டணியை நோக்கி நாம் தொடர்ந்து சென்று கொண்டு இருக்கிறோம். ஆனால் எதிர்க்கட்சியின் நிலைமையை யோசித்து பாருங்கள். மூன்று நாட்களுக்கு முன், அ.தி.மு.க.,வை சேர்ந்த திண்டுக்கல் சீனிவாசன் பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்.

நாங்கள் கூட்டணிக்கு அழைத்தால் 20 சீட்டு அல்லது ரூ.200 கோடி கேட்கிறார்கள் என்று சொல்கிறார். பேரம் பேசக்கூடிய கூட்டணி எதிர்க்கட்சி கூட்டணி. நம் கூட்டணி கொள்கை கூட்டணி; வெற்றி கூட்டணி. தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையிலான வெற்றிக் கூட்டணியை அமைத்து, சட்டசபை தேர்தலில் 234 தொகுதிகளில் 200 தொகுதிகளை வென்று காமிக்கும் என்றார்.

## தேசிய மாணவர் படை தினம் : சென்னை போர் வீரர்கள் நினைவிடத்தில் மலர் மரியாதை



சென்னை, 24 நவம்பர் 2024: தேசிய மாணவர் படை தினத்தையொட்டி, சென்னையில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்தில் இன்று (நவம்பர் 24) மலர் மரியாதை செலுத்தப்பட்டது.

உலகிலேயே மிகவும் பெரிய இளைஞர் அமைப்பாகிய என்சிசி அமைப்பு 1948-ம் ஆண்டு நவம்பர்24-ம் தேதி உருவாக்கப்பட்டது. அதன் 76-வது ஆண்டுவிழா இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, சென்னை போர் வீரர்கள் நினைவிடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய ராணுவ தெற்கு பகுதி தளபதி லெப்டினண்ட் ஜெனரல் கரன்பீர்சிங் பிரார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பாண்டு வாத்தியம் முழங்க மலர் வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார்.

முன்னதாக நிகழ்ச்சிக்கு வந்த லெப் ஜெனரல் கே. எஸ். பிராரை, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் & நிக்கோபார் உள்ளடக்கிய என்.சி.சி அமைப்பின்

துணை தலைமை இயக்குநர் கமொடோர் எஸ். ராகவ் வரவேற்றார்.

என் சி சி கமாண்டர்கள் மற்றும் உயரதிகாரிகளுக்கு, கே. எஸ். பிரார், அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சியின் ஒரு அம்சமாக சென்னையை மையமாகக்கொண்ட என்சிசி 13-வது பட்டாலியன் இளம் வீரர்கள் குழு, கம்பீரமான அணிவகுப்பு நடத்தினர்.

## சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டில் நாளை மிதமான மழை வரும் 27-ஆம் தேதி முதல் 3 நாட்களுக்கு கனமழை பெய்யலாம்

சென்னை, 24 நவம்பர் 2024: தென்கிழக்கு வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி இன்று காலை நிலவரப்படி ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்று அதே பகுதியில் நிலவுவதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இது மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பிறகு அடுத்த இரண்டு நாட்களில் வடமேற்கு திசையில் தமிழ்நாடு - இலங்கை கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இதன் காரணமாக, கடலோர தமிழகம், உள் தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்காலில் மிக கனமழை பெய்யலாம் என்றும் கூறியுள்ளது. இதேபோன்று கடலூர், விழுப்புரம், அரியலூர், சிவகங்கை, புதுக்கோட்டை ராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் புதுவையில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை மறுநாள் கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்காலில் மிக கனமழை பெய்யலாம் என்றும் கணித்துள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று லேசான மழைக்கும், நாளை மிதமான மழைக்கும் வாய்ப்பிருப்பதாகக் கூறியுள்ளது.

மேலும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் வரும் 27-ஆம் தேதி முதல் 3 நாட்களுக்கு கனமழை பெய்யலாம் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.




## கோவா கடற்படை பகுதி அலுவலகம், வருடாந்திர கடற்படை கல்வி சங்க மாநாட்டை நடத்தியது

சென்னை, 24 நவம்பர் 2024: வருடாந்திர கடற்படை கல்விச் சங்க (என்இஎஸ்) மாநாடு, 2024 நவம்பர் 20 முதல் 22 வரை கோவாவின் வாஸ்கோ-ட-காமாவில் உள்ள கோவா கடற்படைப் பகுதியின் தலைமையகத்தில் நடைபெற்றது. முக்கிய நிகழ்வுகளில் நிர்வாகக் குழு, மேலாண்மை ஆலோசனைக் குழு, கல்வி ஆலோசனைக் குழு ஆகியவற்றின் கூட்டங்கள் அடங்கும். அங்கு விவாதங்கள் கடற்படை பள்ளிகளுக்கான கொள்கை கட்டமைப்பை மையமாகக் கொண்டதாக இருந்தது. குறிப்பாக தேசிய கல்விக் கொள்கை 2020-ஐ செயல்படுத்துதல் குறித்து ஆலோசிக்கப்பட்டது. பிரதிநிதிகளுக்காக கோவா கடற்படை குழந்தைகள் பள்ளியின் வழிகாட்டுதல் சுற்றுப்பயணமும் ஏற்பாடு செய்யப்பட்டது.

2024 நவம்பர் 22 கடற்படை கல்விச் சங்க (என்இஎஸ்) தலைவர் வைஸ் அட்மிரல் மெக்கார்ட்டி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கடற்படை தலைமையக அதிகாரிகள், நாடு முழுவதும் உள்ள கடற்படை பள்ளிகளின் கல்வி மற்றும் நிர்வாக தலைமைத்துவத்தின் பங்கேற்பும் இடம்பெற்றது.

மாநாட்டின் போது, கடந்த ஆண்டில் கல்வியில் சிறந்து விளங்கிய பள்ளிகளுக்கு என்இஎஸ் தலைவர் கோப்பைகளை வழங்கினார். வைஸ் அட்மிரல் மெக்கார்ட்டி தமது உரையில், கடற்படை வீரர்களின் குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்குவதில் கடற்படை பள்ளிகளின் குறிப்பிடத்தக்க பங்கை பாராட்டினார். தேசிய கல்விக் கொள்கை, பிற கொள்கை வழிகாட்டுதல்களை திறம்பட செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
ஞாயிறு, நவம்பர் 24, 2024

# ஆர் ஜே பாலாஜி நடிக்கும் 'சொர்க்கவாசல்' திரைப்படத்தின் முன்னோட்டத்தை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் - இசையமைப்பாளர் அனிருத் இணைந்து வெளியிட்டனர்




சென்னை, 24 நவம்பர் 2024: இயக்குநரும், முன்னணி நடிகருமான ஆர். ஜே. பாலாஜி முதன்மை வேடத்தில் நடித்திருக்கும் 'சொர்க்கவாசல்' திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது. இதற்காக சென்னையில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற நிகழ்வில் முன்னணி நட்சத்திர இயக்குநர் லோகேஷ் கனகராஜ் மற்றும் பிரபல இசையமைப்பாளர் அனிருத் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு முன்னோட்டத்தை வெளியிட்டனர்.

அறிமுக இயக்குநர் சித்தார்த் விஸ்வநாத் இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'சொர்க்கவாசல்' படத்தில் ஆர். ஜே. பாலாஜி, இயக்குநரும் நடிகருமான செல்வராகவன், ஒளிப்பதிவாளரும் நடிகருமான நட்டி என்கிற நட்ராஜ், நடிகை சானியா ஐயப்பன், ஷஃரப் உதீன், ஹக்கீம் ஷா, பாலாஜி சக்திவேல், கருணாஸ், ரவி ராகவேந்திரா, அந்தோணி தாசன், சாமுவேல் ராபின்சன், எழுத்தாளர் ஷோபா சக்தி, மௌரிஷ் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். பிரின்ஸ் ஆண்டர்சன் ஒளிப்பதிவு செய்திருக்கும் இப்படத்திற்கு கிறிஸ்டோ சேவியர் இசையமைத்திருக்கிறார். சர்வைவல் க்ரைம் திரில்லர் ஜானரிலான இந்த திரைப்படத்தை ஸ்வைப் ரைட் ஸ்டுடியோஸ் மற்றும் திங்க் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்திருக்கின்றன. உலகம் முழுவதும் ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர்கள் எஸ். ஆர். பிரபு மற்றும் எஸ். ஆர். பிரகாஷ் பாபு இணைந்து வழங்குகிறார்கள்.

வரும் 29ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் இந்த திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியீடு மற்றும் பத்திரிக்கையாளர் சந்திப்பில் படத்தினை உலகம் முழுவதும் வெளியிடும் ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரான எஸ். ஆர். பிரபு , திங்க் ஸ்டுடியோஸ் சந்தோஷ், படத்தின் நாயகன் ஆர். ஜே. பாலாஜி, நாயகி சானியா ஐயப்பன், நடிகர் ஹக்கீம் ஷா, இயக்குநர் சித்தார்த் விஸ்வநாத், ஒளிப்பதிவாளர் பிரின்ஸ் ஆண்டர்சன், கதாசிரியர்கள் தமிழ் பிரபா மற்றும் அஸ்வின் ரவிச்சந்திரன் ஆகியோருடன் இதர படக்குழுவினரும் கலந்து கொண்டனர்.

முன்னோட்டத்தை வெளியிட்டு இயக்குநர் லோகேஷ் கனகராஜ் பேசுகையில், "இந்தப் படத்தில் பணியாற்றிய அனைவரும் எனக்கு நன்கு அறிமுகமானவர்கள். முதலில் படக்குழுவினர் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள். முன்னோட்டம் மிகவும் மனதிற்கு நெருக்கமானதாக இருக்கிறது. ஆறு மாதங்களுக்கு முன்பே இப்படத்தின் சில காட்சிகளை பார்த்திருக்கிறேன். அப்போது 'ஆர். ஜே பாலாஜி எனும் நடிகர் வருகை தருகிறார்' என குறிப்பிட்டேன். படத்தை வெளியிடும் ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனத்திற்கும் என்னுடைய வாழ்த்துகள். இந்தப் படம் வெளியான பிறகு தான் என்னுடைய 'கைதி 2' படத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டுமா, இல்லையா என்பது தெரியவரும் . ஏனெனில் படத்தின் முன்னோட்டம் உணர்வுப்பூர்வமானதாகவும், மனதிற்கு நெருக்கமானதாகவும் இருந்தது," என்றார்.

இசையமைப்பாளர் அனிருத் பேசுகையில், "சொர்க்கவாசல் படத்தின் தயாரிப்பாளர்களான சித்தார்த் ராவ் மற்றும் பல்லவி சிங் எங்கள் குழுவுடன் பதினோரு ஆண்டுகளாக பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு திரைப்படம் தயாரிப்பதில் பெரு விருப்பம் உண்டு. அந்த வகையில் அவர்களுடைய ஸ்வைப் ரைட் ஸ்டுடியோஸின் முதல் திரைப்படமாக சொர்க்கவாசலை தயாரித்திருக்கிறார்கள். இந்தப் படத்தில் பணியாற்றிய அனைவரும் எனக்கு நெருக்கமான நண்பர்கள் தான். ஒளிப்பதிவு செய்திருக்கும் பிரின்ஸ் ஆண்டர்சன் மும்பையில் பிரபல ஒளிப்பதிவாளர் ரவி கே. சந்திரனின் மகனான சாண்டோவின் உதவியாளர். அவர் ஒளிப்பதிவாளராக அறிமுகமாகும் படம் இது. அற்புதமாக பணியாற்றியிருக்கிறார். அவருக்கு சிறந்த எதிர்காலம் இருக்கிறது, அதற்காக மனதார வாழ்த்துகிறேன். எங்களுடைய குழுவில் ஒலி கலவை பொறுப்பினை பத்தாண்டுகளாக சிறப்பாக செய்து வரும் கலைஞர் வினய் ஸ்ரீதர் இதில் பணியாற்றி இருக்கிறார். இந்தப் படத்தின் தயாரிப்பில் இணைந்திருக்கும் திங்க் ஸ்டுடியோஸ் நிறுவனத்திற்கும் நன்றி. திரைப்படத்தை வெளியிடும் ட்ரீம் வாரியார் பிக்சர்ஸ் நிறுவனம் அவரர்களுடைய அனுபவத்தால் இந்த படத்தை உலகம் முழுவதும் சிறப்பாக வழங்குவார்கள். இதற்காக அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இயக்குநர் சித்தார்த் விஸ்வநாத் பள்ளியில் எனக்கு இரண்டு வருட ஜூனியர். அந்தத் தருணத்தில் அவருக்கு சினிமாவில் ஆர்வம் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. அதன் பிறகு ஒரு நாள் என்னை சந்தித்து திரைப்பட இயக்குநராக வேண்டும் என தெரிவித்தார். அதன் பிறகு ஒரு இயக்குநரிடம் உதவி இயக்குநராக சேர்ந்து, மூன்று திரைப்படங்களில் பணியாற்றி 'சொர்க்கவாசல்' திரைப்படத்தை உருவாக்கி இருக்கிறார். இந்தப் படத்தின் கதையை முழுவதுமாக விவரித்துவிட்டு, யார் நாயகனாக நடித்தால் நன்றாக இருக்கும் என என்னிடம் கேட்டார். நான் அப்போது இதற்கு என்னுடைய நண்பரான ஆர். ஜே. பாலாஜி தான் பொருத்தமானவராக இருப்பார் என்று மனதில் பட்டதை உடனே சொன்னேன். இந்த படத்தினை பார்த்து விட்டேன், என்னுடைய நண்பர்கள் அனைவரும் இணைந்து ஒரு தரமான படைப்பை உருவாக்கி இருக்கிறார்கள் என்று மகிழ்ந்தேன். நான் இசையமைப்பாளராக வாழ்க்கையை தொடங்கும் போது ஆர். ஜே. பாலாஜி பண்பலை வானொலியில் தொகுப்பாளராக புகழ்பெற்று இருந்தார். அப்போது அவருடன் பேசுவது எங்களுக்கெல்லாம் பெருமிதமாக இருக்கும். ஆர் ஜே வாக கலை உலக பயணத்தை தொடங்கி இன்று நடிகராக உயர்ந்திருக்கிறார். அவர் நடித்த படங்கள் அனைத்தும் கமர்ஷியலாக வெற்றி பெற்று இருக்கின்றன□. அவர் நடிக்கும் படங்களுக்காக□ கடினமாக உழைப்பார். காமெடியனாக நடித்திருக்கிறார், கமர்ஷியலாக நடித்திருக்கிறார், ஆனால் இந்த திரைப்படத்தில் அவர் ஒரு அற்புதமான நடிகராக உருமாற்றம் பெற்றிருக்கிறார். செல்வராகவன் இந்தத் திரைப்படத்திற்கு ஒரு தூணாக இருக்கிறார். என்னுடைய கலை உலக பயணத்தையும், இசைப்பயணத்தையும் நேர்த்தியாக வடிவமைத்ததில் செல்வராகவனுக்கும் கணிசமான பங்கு உண்டு. இந்த படத்தில் இணைந்து பணியாற்றியதற்காக அவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திரைப்படம் பெரிய அளவில் வெற்றி பெற்று அனைவரது வாழ்விலும் சொர்க்கவாசல் திறக்கும் என்று நம்புகிறேன்," என்றார்.

இயக்குநரும், நடிகருமான செல்வராகவன் பேசுகையில், "இந்த திரைக்கதையை முழுவதுமாக படித்துவிட்டு இயக்குநரிடம் நீங்கள் தான் எழுதினீர்களா, இதை யார் எழுதினார்கள் எனக் கேட்டேன். இதனை படப்பிடிப்பு நிறைவு செய்யும் வரை கேட்டுக் கொண்டே இருந்தேன். ஏனெனில் இப்படி ஒரு திரைக்கதையை எழுத முடியுமா என்பது ஆச்சரியமாக இருக்கிறது. இதை நான் இந்த தருணத்தில் சொல்வது சற்று மிகைப்படுத்தலாகவே இருக்கும், இருந்தாலும் படம் வெளியான பிறகு நீங்கள் அதை உண்மை என்று ஒப்புக் கொள்வீர்கள். இது போன்றதொரு திரைக்கதையை எழுதுவது சாதாரணமான விஷ□யம் அல்ல, வாசிக்கும் போது எனக்கு சற்று பொறாமையாகவே இருந்தது.

நல்ல படம் வரவேண்டும் என்று நிறைய பேசுகிறோம். ஆனால் அது குறித்து யாரும் முயற்சி செய்வதில்லை. இந்த படம் நிச்சயம் வித்தியாசமானதாக இருக்கும். இதற்கு நான் உத்தரவாதம் அளிக்கிறேன். இந்தத் திரைப்படத்தை ரசிகர்களுடன் திரையரங்குகளில் காண்பதற்கு நானும் ஆவலாக காத்திருக்கிறேன்." என்றார்.

நடிகை சானியா ஐயப்பன் பேசுகையில், "ஆர். ஜே. பாலாஜியுடன் இணைந்து நடித்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் இதுவரை இது போன்ற கதாபாத்திரங்களை ஏற்று நடித்ததில்லை. அற்புதமான வாய்ப்பை வழங்கிய இயக்குநருக்கும், தயாரிப்பாளருக்கும் நன்றி. 29ம் தேதி முதல் படம் திரையரங்குகளில் வெளியாகிறது, அனைவரும் திரையரங்கத்திற்கு சென்று பார்த்து ரசித்து ஆதரவு அளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்," என்றார்.

இயக்குநர் சித்தார்த் விஸ்வநாத் பேசுகையில், "அறிமுக இயக்குநருக்காக இப்படி ஒரு பிரம்மாண்டமான மேடையை வழங்கிய அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். படத்தைப் பற்றி அதிகம் பேசாமல் இதில் நடித்த நடிகர்கள், நடிகைகள், பணியாற்றிய தொழில்நுட்பக் கலைஞர்களைப் பற்றி பேசுவதற்கு முன் அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திரைப்படத்தில் ஆர் ஜே பாலாஜி - செல்வராகவன் -பாலாஜி சக்திவேல்- கருணாஸ் - நட்டி- என பத்திற்கும் மேற்பட்ட முன்னணி நட்சத்திரங்கள் பணியாற்றினார்கள். அவர்கள் அறிமுக இயக்குநர் என்று எந்த ஒரு தயக்கமும் இல்லாமல் தங்களின் முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

நைஜீரிய நாட்டில் இருந்து சாமுவேல் ராபின்சன் என்ற நடிகர் இங்கு வருகை தந்து நடித்தார். கேரளாவில் இருந்து ஷஃரப் உதீன் - ஹக்கீம் ஷா- சானியா ஐயப்பன்- என மூன்று நட்சத்திரங்கள் இந்த படத்தில் பணியாற்றினார்கள்.

இந்த மேடைக்காக... மேடைக்கு வருவதற்காக வழி அமைத்துக் கொடுத்தவர் இயக்குநர் பா. ரஞ்சித். அவரிடம் ஆறு ஆண்டுகள் பணியாற்றினேன். நிறைய விஷயங்களை கற்றுக் கொண்டேன். அதற்காக அவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சொர்க்கவாசல் படத்தின் கதையை மூன்றாண்டுகளுக்கு முன் ஒரு உண்மை சம்பவத்தை மையமாக வைத்து எழுத திட்டமிட்டோம். 'வட சென்னை', 'விருமாண்டி' என இதற்கு முன் வெளியான கல்ட் திரைப்படங்களை பார்த்தோம். அதன் பிறகு இந்த படைப்பை வித்தியாசமான கோணத்தில் வித்தியாசமாக வழங்கலாம் என தீர்மானித்தோம். இதற்காக ராஜமுந்திரியில் உள்ள சிறைக்குச் சென்று சிறை கைதிகளுடன் பேசினோம். அந்தத் தருணத்தில் தவறே செய்யாமல் ஏராளமானவர்கள் சிறையில் இருப்பதை கண்டோம். அவர்களை விசாரணை கைதி என குறிப்பிடுவார்கள். இந்தியாவில் 70 சதவீதத்திற்கு மேல் சிறையில் விசாரணை கைதிகள் தான் இருக்கிறார்கள் என்ற ஒரு தகவலும் கிடைத்தது. இவர்களுக்கு நீதிமன்றம் இதுவரை எந்த தண்டனையும் வழங்கவில்லை. இருந்தாலும் இவர்கள் சிறையில் இருக்கிறார்கள். அவர்களிடம் உரையாடும்போது அவர்களிடம் இருந்த ஒரே விஷ□யம் நம்பிக்கை. அவர்கள் என்றாவது ஒரு நாள் இந்த சொர்க்கவாசல் திறந்து வீட்டிற்குச் சென்று குடும்பத்தினருடன் வாழலாம் என நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். அந்த விஷ□யம் இந்தப் படத்தில் இடம் பிடித்திருக்கிறது. இது பார்வையாளர்களுடன் எளிதில் தொடர்பு கொள்ளும் என நம்புகிறேன். எமோஷனல் வித் ஆக்ஷன் திரில்லராக இந்த திரைப்படம் இருக்கும். இரண்டு மணி நேரம் பத்து நிமிடம் அளவிற்கு இந்த திரைப்படத்தை நாங்கள் உருவாக்கி இருக்கிறோம். இந்த படைப்பை ரசிகர்களாகிய நீங்கள் எப்படி வரவேற்பு அளிப்பீர்கள் என்ற ஆவலுடன் காத்திருக்கிறேன். இந்தத் திரைப்படத்திற்கு ஊடகங்களும், மக்களும் ஆதரவு தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்," என்றார்.

நடிகர் ஆர். ஜே. பாலாஜி பேசுகையில், "அனைவருக்கும் வணக்கம். பிரதம மந்திரி- ஜனாதிபதி - முதலமைச்சர் - ஆகிய மூவரைத் தவிர அனைவருக்கும் நன்றி சொல்லி விட்டோம். இந்த குழுவுடன் எனக்கு ஒன்றரை ஆண்டு கால பயணம் இருக்கிறது. இந்தப் படத்தில் நிறைய அறிமுக கலைஞர்கள் பணியாற்றி இருக்கிறார்கள். இதனால் அவர்கள் அனைவரும் தங்களுக்கு உதவியவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். நான் கீழே அமர்ந்திருக்கும் போது மேடையில் பேசிய அனைவரின் பேச்சையும் ரசித்து கேட்டேன். அதேபோல் கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக இவர்கள் படத்தை ரசித்து ரசித்து எடுப்பதையும் பார்த்து இருக்கிறேன். நான் நடித்த ஒரு படத்தை ரிலீஸிற்கு நான்கு நாள் இருக்கும் இந்த தருணத்திலும் நான் இதுவரை பார்க்கவில்லை. அதற்கு காரணம் நான் இவர்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை. இந்தப் படத்தில் நடிப்பதற்கு வாய்ப்பளித்ததற்காக இயக்குநர் சித்தார்த்திற்கு இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னிடமிருந்து நடிப்பை அவர் வாங்கினார். அவரிடத்தில் எழுத்து வடிவத்தில் முழு திரைக்கதையும் இருந்தது. இதற்காக உழைத்த எழுத்தாளர்கள் தமிழ் பிரபா - அஸ்வின் ரவிச்சந்திரன் மற்றும் சித்தார்த்துக்கு நன்றி.

இந்தப் படத்தில் டீசர் வெளியானவுடன் என்னுடைய நண்பர்களான நிறைய ஹீரோக்கள் இயக்குநருக்கு போன் செய்து பாராட்டி இருக்கிறார்கள். இந்தப் படத்தின் முன்னோட்டம் மற்றும் படம் வெளியான பிறகு அவருக்கு மிகப்பெரிய வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

படப்பிடிப்பு தளத்தில் அவருடைய குழுவினரை நான் கலாய்த்து இருக்கிறேன். ஏனென்றால் அவர்கள் எப்போதும் ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டிருப்பார்கள். உதவி இயக்குநராக பணியாற்றிய அருண் - இந்த படத்தில் ஒரு பாடலை எழுதி இருக்கிறார். ஒளிப்பதிவாளர் பிரின்ஸ் ஆண்டர்சன் குழுவினரும் திறமையானவர்கள். அவளர்களுடன் இணைந்து பணியாற்றியதில் மகிழ்ச்சி அடைகிறேன். இவர்களிடமிருந்து நிறைய விஷ□யங்களை கற்றுக் கொண்டிருக்கிறேன். நான் நடித்த திரைப்படங்களிலேயே இந்த படத்தில் தான் போட்டோகிராபி சிறப்பாக இருக்கிறது. மிகப்பெரிய வேலையை எளிதாகவும், சிரமமின்றியும் செய்பவர் ஒளிப்பதிவாளர் பிரின்ஸ். அவருக்கு பெரிய எதிர்காலம் காத்திருக்கிறது.

இப்படத்தின் எடிட்டர் செல்வாவுடன் இணைந்து 'எல்கேஜி', 'மூக்குத்தி அம்மன்', 'வீட்ல விசேஷங்க', 'சிங்கப்பூர் சலூன்' என அனைத்து படத்திலும் இணைந்து பணியாற்றியிருக்கிறேன். அவருடன் இந்த படத்திலும் இணைந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். அவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த படத்தில் அவருக்கு மிகப்பெரிய அங்கீகாரம் கிடைக்கும் என்று நம்புகிறேன். கடவுள் புண்ணியத்தில் இந்த படத்தில் அவருக்கு தேசிய அளவில் விருது கிடைக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கிறேன்.

கதாசிரியர் தமிழ் பிரபாவின் எழுத்துக்கு நான் மிகப்பெரிய ரசிகன். இந்தப் படத்தில் எனக்கு ஜோடியாக நடித்திருக்கும் சானியா ஐயப்பன்.. இந்த திரைப்படத்தின் விளம்பர நிகழ்விற்கு வருகை தந்திருக்கிறார். படத்திற்கும் சிறப்பாக புரொமோஷன் செய்து வருகிறார். அவர் இந்த படத்தில் தன்னுடைய சிறப்பான பங்களிப்பை வழங்கி இருக்கிறார். தமிழில் மட்டுமல்லாமல் தெலுங்கு, கன்னடம் என அனைத்து மொழிகளிலும் அவரும் வெற்றி பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

செல்வராகவன் திரையில் தோன்றினாலே பெரிய நட்சத்திர நடிகர் போல் இருக்கும். படப்பிடிப்பு தளத்தில் அவர் எப்போதும் அமைதியாக இருப்பார். அவருக்கு நண்பர்களும் குறைவு. படபிடிப்பு தளத்தில் மிக குறைவாகவே பேசுவார். மிகப்பெரிய ஸ்டார் இந்த படத்தில் இருக்கிறார் என்ற உணர்வே எங்களுக்கு இருந்தது.

மேலும் இந்தப் படத்தில் நடித்திருக்கும் அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் படம் எனக்கு ஸ்பெஷலானது. ஏனெனில் படத்தை இயக்கிய சித்தார்த் 15 ஆண்டு காலத்திற்கு முன் நான் கிரிக்கெட் விளையாடும் போது எனக்கு பின்னால் நின்று கொண்டிருப்பான். அவனது இயக்கத்தில் நடித்திருக்கிறேன்.

நான் சூர்யாவின் படத்தை இயக்கிக் கொண்டிருப்பதற்கும், இப்படத்தின் தயாரிப்பாளரான சித்தார்த் ராவிற்கு பங்கு உண்டு. அவருடைய முதல் பட தயாரிப்பில் நானும் இடம் பெற்றதற்கு இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

திங்க் ஸ்டுடியோஸ் தயாரிப்பாளர் ஸ்வரூப். எல் கே ஜி படம் வெளியான தருணத்திலிருந்து என்னுடன் இணைந்து ஒரு படத்தில் பணியாற்ற வேண்டும் என்று விருப்பம் தெரிவித்து இருந்தார். இந்த படத்தின் கதையை இரவு 10 மணி அளவிற்கு கேட்டுவிட்டு அடுத்த நாள் காலையில் இணைந்து பணியாற்றலாம் என சம்மதம் தெரிவித்தார். இதற்காக அவருக்கு இந்த தருணத்தில் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்வு எனக்கு மிகவும் ஸ்பெஷல் ஆனது. 'தீயா வேலை செய்யணும் குமாரு' படம் வெளியான தருணத்திலிருந்து இதுவரை 13 ஆண்டுகள் கடந்து விட்டது. என்னுடைய மனைவி திவ்யா நாகராஜன் இந்த நிகழ்விற்கு வருகை தந்திருக்கிறார். அவர் கலந்து கொள்ளும் முதல் சினிமா நிகழ்வு இதுதான்.

சொர்க்கவாசல் படத்தை பற்றி பேசுவதில் எனக்கு உடன்பாடு இருந்ததில்லை. இந்த படம் நன்றாக வந்திருக்கிறது. பார்த்தவர்கள் அனைவரும் பாராட்டுகிறார்கள். இந்தப் படத்தின் டீசருக்கும் பெரும் வரவேற்பு கிடைத்தது. தற்போது படத்தின் முன்னோட்டம் வெளியாகி இருக்கிறது. இதற்கும் பெரும் வரவேற்பு கிடைக்கும் என்று நம்பிக்கை இருக்கிறது.

இதற்கு முன் ஒரு திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் சர்ச்சையை ஏற்படுத்து வகையில் எதையாவது பேச வேண்டும் என்று இருந்தது. ஆனால் நான் தற்போது என்ன நினைக்கிறேன் என்றால்.. பேசுவதற்கு எதுவும் இல்லை என்றாலும் பரவாயில்லை. படத்தின் கன்டென்ட் நன்றாக இருந்தால் அது மக்களிடம் ரீச் ஆகிவிடும்.

நான் 2006ம் ஆண்டிலிருந்து இதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். விற்பனை செய்வதற்காக ஒரு கடைக்கு நாம் பிஸ்கட்டை எடுத்து சென்று விட்டால் அதை மற்றவர்கள் நன்றாக இருக்கிறது.

இல்லை என்று சொல்லத்தான் செய்வார்கள். அதேபோல் தான் சினிமாவும். ரசிகர்களை சென்றடைந்த பின் ஒரு படத்தைப் பற்றி அவர்கள் விமர்சனம் செய்வார்கள்.

ஒரு படம் வெளியான பிறகு அதைப்பற்றி யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் விமர்சிக்கலாம். யூடியூபில் விமர்சிக்கலாம்... ட்விட்டரில் விமர்சிக்கலாம் .. இன்ஸ்டாகிராமில் விமர்சிக்கலாம். அது அவர்களுடைய சுதந்திரம். யாரும் அவர்களிடத்தில் இருக்கும் செல்போனை பறிக்க முடியாது. அதனால் விமர்சனம் குறித்த கட்டுப்பாடு நம்மிடத்தில் இல்லை. சொர்க்கவாசல் படத்தில் கன்டென்ட் நன்றாக இருக்கிறது. இந்தப் படத்தை பார்த்து நன்றாக இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காகத் தான் ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் வெளியிடுகிறது. இவர்கள்தான் என்னுடைய அடுத்த படத்தின் தயாரிப்பாளர்கள். இந்தப் படத்தின் விநியோகஸ்தர்கள்.

போட்டிகள் நிறைந்த சூழலில் ஓடிடி எனப்படும் டிஜிட்டல் ரைட்ஸ் விற்பது கடினமாக இருக்கும். ஆனால் நல்ல தொகையை கொடுத்து இப்படத்தின் உரிமையை வாங்கி இருக்கும் நெட்பிளிக்ஸ் நிறுவனத்திற்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எங்கள் குழு மீது வைத்த நம்பிக்கைக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

தற்போதெல்லாம் பயம் அதிகமாக ஏற்படுகிறது. வெளியில் தேசியக்கொடி ஒன்றினை கையில் ஏந்தி கொண்டு இந்தியன் என்ற உணர்வோடு இருந்தால் அதற்கும் ஏதாவது விமர்சனம் செய்வார்களோ என்ற பயம் ஏற்படுகிறது.

நான் பாவாடையும் கிடையாது. சங்கியும் கிடையாது. அனைத்து அரசியல் கட்சியின் ஐ டி விங்கிடம் ஒரு பணிவான வேண்டுகோள் வைக்கிறேன். நீங்கள் அரசியலை மட்டும் பாருங்கள். சினிமாவை விட்டு விடுங்கள். சினிமாவில் வாரந்தோறும் திரைப்படங்கள் வெளியாகின்றன. திரைப்படங்களை விமர்சித்து அதனை அழிப்பதில் எதற்காக உங்களுடைய ஆற்றலை வீணடிக்கிறீர்கள்.

அதேபோல் ரசிகர்களிடத்திலும் ஒரு வேண்டுகோளை வைக்கிறேன் அதாவது ரஜினி ரசிகர்கள் -கமல் ரசிகர்கள்- விஜய் ரசிகர்கள்- அஜித் ரசிகர்கள்- என எல்லா ரசிகர்களும் நல்ல திரைப்படங்களை பாருங்கள். படம் பிடிக்கவில்லை என்றால் விமர்சனம் செய்யுங்கள். அது உங்கள் உரிமை. ஆனால் அவர்கள் படம் வந்தால் தடுக்காதீர்கள்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க இளைஞர்களுக்கு பிரதமர் அழைப்பு

சென்னை, 24 நவம்பர் 2024: பிரதமர் திரு நரேந்திர மோடி தனது மாதாந்திர மனதின் குரல் உரையில், வளர்ச்சி அடைந்த பாரதத்தை வடிவமைப்பதில் இளைஞர்களின் பங்கை வலியுறுத்தினார். இளம் உள்ளங்கள் ஒன்றிணைவதற்கான சக்தியை எடுத்துரைத்த அவர், 2025 ஜனவரி 11-12 தேதிகளில் புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறவுள்ள 'வளர்ச்சி அடைந்த பாரதம் இளம் தலைவர்கள் உரையாடல்' என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முன்முயற்சியை அறிவித்தார்.

சுவாமி விவேகானந்தரின் 162-வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில், இந்த பிரம்மாண்டமான நிகழ்வு, நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான இளைஞர்களை ஒன்றிணைக்கவும், விவாதிக்கவும், இந்தியாவின் எதிர்காலத்திற்கான யோசனைகளை முன்வைக்கவும் ஒரு தளமாக செயல்படும். கிராமங்கள், வட்டாரங்கள், மாவட்டங்கள், மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள் உரையாடலுக்காக கூடுவார்கள்.

இந்த நிகழ்ச்சி பற்றி பேசிய பிரதமர், அடிமட்ட அரசியல் ஈடுபாட்டை வளர்ப்பது, புதிய தலைமையை வளர்ப்பது குறித்த தமது தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்தினார். "செங்கோட்டையின் கொத்தளத்தில் இருந்து, அரசியல் பின்புலம் இல்லாத இளைஞர்கள் அரசியலில் அடியெடுத்து வைக்க வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். வளர்ச்சி அடைந்த பாரதம் இளம் தலைவர்கள் உரையாடல் அந்த திசையில் மற்றொரு படியாகும்," என்று அவர் கூறினார்.

இந்த உரையாடலில் தேசிய, சர்வதேச வல்லுநர்கள், சிந்தனையாளர்கள், முக்கியப் பிரமுகர்கள் இடம்பெறுவார்கள். இதில் பிரதமரே கலந்து கொண்டு இளைஞர்களுடன் கலந்துரையாடி, நாட்டின் முன்னேற்றத்திற்கான புதுமையான யோசனைகளை முன்வைக்க அவர்களை ஊக்குவிப்பார். இந்த நுண்ணறிவுகள் இந்தியாவின் எதிர்காலத்திற்கான விரிவான திட்டத்தை உருவாக்க பங்களிக்கும்.

தேச நிர்மாணத்தில் இளைஞர்கள் தீவிரமாக பங்கேற்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டார். "இந்தியாவின் எதிர்காலத்தை கட்டமைக்கப் போகிறவர்களுக்கு இது ஒரு சிறந்த வாய்ப்பு. வாருங்கள், நாம் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம். நாட்டை வளர்ச்சி அடையச் செய்வோம்." என்று பிரதமர் கூறினார்.

சுவாமி விவேகானந்தரின் உணர்வைக் கொண்டாடுவதிலும், இளம் மனங்களை ஊக்குவிப்பதிலும், பிரகாசமான, வளர்ந்த இந்தியாவுக்கான அடித்தளத்தை அமைப்பதிலும் இந்த நிகழ்வு ஒரு நினைவுச்சின்ன தருணமாக இருக்கும்.

தேசிய இளைஞர் விழாவின் மறுவடிவமான வளர்ச்சி அடைந்த பாரதம் இளம் தலைவர்கள் உரையாடல், இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இளைஞர்களின் ஈடுபாட்டை ஊக்குவிப்பதற்கான நான்கு கட்ட போட்டியாகவமையும்.

# நுகர்வோர் குறைகளைத் தீர்க்க 1000-க்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் தேசிய நுகர்வோர் ஹெல்ப்லைன் இணைந்து செயல்படுகிறது

சென்னை, 24 நவம்பர் 2024: ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாக தேசிய நுகர்வோர் ஹெல்ப்லைன் அதன் ஒருங்கிணைப்பு திட்டத்தின் கீழ் 1000-க்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது. இந்த நிறுவனங்கள் இ-காமர்ஸ், பயணம், சுற்றுலா, தனியார் கல்வி, எஃப்எம்சிஜி, நுகர்வோர் சாதனங்கள், மின்னணு தயாரிப்புகள், சில்லறை விற்பனை நிலையங்கள், ஆட்டோமொபைல்கள், டி.டி.எச் - கேபிள் சேவைகள், வங்கி உள்ளிட்ட முக்கிய துறைகளில் அமைந்துள்ளன. இந்த ஒருங்கிணைப்பின் மூலம், நிறுவனங்கள் தொடர்பான புகார்கள் தீர்வுக்காக நேரடியாக அவர்களுக்கு மாற்றப்படுகின்றன.

2017-ம் ஆண்டில் 263 நிறுவனங்களாக இருந்த ஒருங்கிணைப்பு எண்ணிக்கை தற்போது 1009 நிறுவனங்களாக அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சி ஹெல்ப்லைனின் செயல்திறனை மேம்படுத்துவதிலும், விரைவான, பயனுள்ள குறை தீர்ப்பிலும் கவனம் செலுத்தப்படுவதை எடுத்துக்காட்டுகிறது. நுகர்வோர் புகார்கள் வழக்குக்கு முந்தைய கட்டத்தில் தீர்க்கப்படுவதை இவை உறுதி செய்கின்றன. நுகர்வோரின் நம்பிக்கையை வளர்க்கின்றன. இருப்பினும், ஒரு புகார் தீர்க்கப்படாவிட்டால், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019-ன் கீழ் பொருத்தமான நுகர்வோர் ஆணையத்தை அணுக நுகர்வோர் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

இந்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள் துறை, குறை தீர்க்கும் செயல்முறையை மேம்படுத்த குறை விவரங்களை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் பேச்சு அங்கீகாரம், மொழிபெயர்ப்பு அமைப்பு, நுகர்வோர் தங்கள் உள்ளூர் மொழிகளில் குரல் உள்ளீடு மூலம் புகார்களைப் பதிவு செய்ய அனுமதிக்கும். இது மனித தலையீட்டைக் குறைக்கும்.

தேசிய நுகர்வோர் உதவி மையத்தை (என்.சி.எச்) துறை சீரமைத்துள்ளது. இது இந்தியா முழுவதும் உள்ள நுகர்வோருக்கு வழக்குக்கு முந்தைய கட்டத்தில் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான மைய புள்ளியாக உள்ளது. இந்த உதவி எண் சேவை இந்தி, ஆங்கிலம், காஷ்மீரி, பஞ்சாபி, நேபாளி, குஜராத்தி, மராத்தி, கன்னடம், தெலுங்கு, தமிழ், மலையாளம், மைதிலி, சந்தாலி, பெங்காலி, ஒடியா, அசாமி, மணிப்புரி உள்ளிட்ட 17 மொழிகளில் கிடைக்கிறது.

# நாளைய முன்னணி திரைப்பட இயக்குநர்களுக்கான தளமாக ஐஎஃப்எஃப்ஐ அமைந்துள்ளது - சஞ்சய் ஜாஜு

சென்னை, 24 நவம்பர் 2024: இளைஞர்களின் துடிப்பான உற்சாகம், உற்சாகமான சூழலுடன், கோவாவில் நடைபெற்று வரும் 55-வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் நடைபெற்ற கிரியேட்டிவ் மைண்ட்ஸ் ஆஃப் டுமாரோ (சிஎம்ஓடி) எனப்படும் 'நாளைய படைப்பாளி மனங்கள்' நிகழ்வின் நிறைவு விழா அமைந்தது. இந்தியாவின் மிகவும் நம்பிக்கைக்குரிய இளம் திரைப்பட இயக்குநர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு ஆதரவு வழங்கும் முன்னணி தளமாக சிஎம்ஓடி உருவெடுத்துள்ளது. இந்த முயற்சி பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தியா முழுவதிலுமிருந்து கிட்டத்தட்ட 1,070 உள்ளீடுகள் இதற்காகப் பெறப்பட்டது.

இந்த நிகழ்வின் சிறப்பம்சமாக 48 மணி நேரத்தில் திரைப்படத் தயாரிப்பு சவால் நடைபெற்றது. இதில் பங்கேற்பாளர்கள், தலா 20 பேர் கொண்ட ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, "தொழில்நுட்ப யுகத்தில் உறவுகள்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்ட குறும்படங்களை உருவாக்கினர். இந்த சவால் நவம்பர் 2024 21 முதல் 23 வரை நடைபெற்றது. இது அணியின் படைப்பாற்றலை சோதிப்பதாக அமைந்தது.

இந்த ஆண்டு, சிஎம்ஓடி-யில் 48 மணி நேர திரைப்படத் தயாரிப்பு சவாலின் வெற்றியாளர்கள்:

1. சிறந்த படம்: குல்லு

*சிறந்த படம் (ரன்னர்-அப்): வீ ஹியர் தி சேம் மியூசிக்

2. சிறந்த இயக்குநர்: அர்ஷலி ஜோஸ் (குல்லு)

3. சிறந்த திரைக்கதை: ஆதிராஜ் போஸ் (லவ்பிக்ஸ் சந்தா)

4. சிறந்த நடிகை: விசாகா நாயர் (லவ்பிக்ஸ் சந்தா)

5. சிறந்த நடிகர்: புஷ்பேந்திர குமார் (குல்லு)

பங்கேற்பாளர்களைப் பாராட்டிய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலாளர் திரு சஞ்சய் ஜாஜு, மிகுந்த அழுத்தத்தின் கீழ் 48 மணி நேரத்திற்குள் இதுபோன்ற முன்மாதிரியான படங்களை தயாரிப்பது ஒரு சாதனை என்றார். இங்குள்ள ஒவ்வொரு பங்கேற்பாளரும் ஒரு வெற்றியாளர் என அவர் குறிப்பிட்டார். இந்த ஆண்டு, திரைப்பட விழா நமது நாட்டின் இளைஞர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது என்றார். இந்த ஆண்டு நடைபெறும் இந்த சர்வதேச திரைப்பட விழா கடந்த கால ஜாம்பவான்களுக்கும் எதிர்கால சாதனையாளர்களுக்காகவு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டபோது, ஷார்ட்ஸ் இன்டர்நேஷனலின் நிறுவனரும் தலைமைச் செயல் அதிகாரியுமான கார்டர் பில்ச்சர், பங்கேற்பாளர்களைப் பாராட்டினார். "இந்த ஆண்டு தயாரிக்கப்பட்ட படங்களின் தரம் உள்ளடக்கம் சிறப்பானது" என்று குறிப்பிட்டார்.

இங்கிலாந்தைத் தலைமை இடமாகக் கொண்ட ஷார்ட்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட 48 மணிநேர திரைப்படத் தயாரிப்பு சவால் இளம் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு தீவிர நேரக் கட்டுப்பாடுகளின் கீழ் தனித்துவமான வாய்ப்பை வழங்குவதாக அமைந்தது.

# தேசிய இளைஞர் விழா 2025- வளர்ச்சியடைந்த பாரதம் இளம் தலைவர்கள் உரையாடல்




சென்னை, 24 நவம்பர் 2024: வளர்ந்த இந்தியா பற்றிய கருத்துக்களைப் பிரதமருடன் பகிர்ந்து கொள்ள இளைஞர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்த பாரதம் வினாடி வினா, 2024 நவம்பர் 25 முதல் டிசம்பர் 5 வரை மை பாரத் தளத்தில் நடைபெறுகிறது.

தேசிய இளைஞர் விழா 2025-ன் ஒரு பகுதியாக நடைபெறும் வளர்ச்சியடைந்த பாரதம் இளம் தலைவர்கள் உரையாடல் 2025-ம் ஆண்டு ஜனவரி 11 மற்றும் 12 ஆம் தேதிகளில் புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

இளம் திறமையாளர்களைக் கண்டறிந்து வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட இந்தத் திட்டம், வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தளமாக இருக்கும். வளர்ச்சியடைந்த பாரதம் நிகழ்ச்சி மூலம் பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் நேரடியாக உரையாடவும், இந்தியாவின் எதிர்காலம் குறித்த தங்கள் கருத்துக்களை முன்வைக்கவும் இளைஞர்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்புக் கிடைக்கும்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சுதந்திர தின உரையில் அழைப்பு விடுத்தது போல் இளம் தலைவர்களை அரசியலுக்கு கொண்டு வருவது இதன் நோக்கமாகும். இது ஒரு வெளிப்படையான, ஜனநாயக மற்றும் தகுதி அடிப்படையிலான தேர்தல் மூலம் வளர்ந்த இந்தியாவிற்கு இளைஞர்களின் அர்த்தமுள்ள பங்களிப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வளர்ந்த பாரதத்தை உருவாக்க இளைஞர்களின் திறனைப் பயன்படுத்துவதற்கான அரசின் உறுதிப்பாட்டுக்கு ஏற்ப, தகுதியுள்ள அனைத்து இளம் பெண்களும் ஆண்களும் வளர்ச்சியடைந்த பாரதம் இளம் தலைவர்கள் உரையாடலில் பங்கேற்கலாம். மேரா யுவ பாரத் (மை பாரத்) தளத்தில் 25 நவம்பர் 2024 மற்றும் டிசம்பர் 5, 2024 க்கு இடையில் நடத்தப்படும் டிஜிட்டல் வினாடி வினாவில் 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளம் பெண்களும் ஆண்களும் பங்கேற்பதன் மூலம் அடுத்த கட்டங்களுக்குத் தகுதி பெறலாம்.

இது தொடர்பான கூடுதல் தகவல்களை மை பாரத் தளத்திலிருந்தும் இந்திய விளையாட்டு ஆணையம், நேரு யுவ கேந்திரா மற்றும் நாட்டு நலப்பணி திட்ட அலுவலகங்களிலிருந்தும் பெறலாம்.

தேசிய இளையோர் திருவிழாவின் மறுவடிவமைப்பான வளர்ச்சியடைந்த பாரதம் இளம் தலைவர்கள் உரையாடல், இந்தியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவிக்க நான்கு கட்டங்களாக வளர்ச்சியடைந்த பாரதம் சவாலை முன்வைக்கிறது.

கட்டம் 1: வளர்ச்சியடைந்த பாரதம் வினாடி வினா: நவம்பர் 25, 2024 முதல் டிசம்பர் 5, 2024 வரை, டிஜிட்டல் வினாடி வினா 15 - 29 வயதுடையவர்களுக்கான எனது இளைய பாரதம் (மை பாரத்) தளத்தில் பங்கேற்க வேண்டும்.

கட்டம் 2: டிசம்பர் 08 2024 முதல் டிசம்பர் 15 2024 வரை, கட்டுரை/ வலைப்பதிவு எழுதுதல் : முந்தைய சுற்றில் வெற்றி பெற்றவர்கள், "வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தொழில்நுட்பம்" மற்றும் "வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல்" போன்ற சுமார் 10 யோசனைகள் பற்றிய கட்டுரைகளை சமர்ப்பிப்பார்கள். இந்தப் போட்டியும் மை பாரத் தளத்தில் நடத்தப்படும்.

கட்டம் 3: டிசம்பர் 20 2024 முதல் டிசம்பர் 26 2024 வரை, வளர்ச்சியடைந்த பாரதம் விஷன் பிட்ச் டெக்: மாநில அளவிலான விளக்கக்காட்சிகள்: இரண்டாம் சுற்றில் தகுதி பெறும் பங்கேற்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளில் மாநில அளவில் தங்கள் கருத்துக்களை முன்வைப்பார்கள்.

கட்டம் 4: புதுதில்லியில் நடைபெறும் வளர்ச்சியடைந்த பாரதம் தேசிய சாம்பியன்ஷிப்: 2025 ஜனவரி 11 முதல் 12 வரை நடைபெறும் தேசிய இளைஞர் விழாவில் பல்வேறு தலைப்புகளின் அடிப்படையில் மாநில அளவிலான அணிகள் போட்டியிடும். வெற்றிபெறும் அணிகள், பிரதமர் திரு நரேந்திர மோடியிடம், வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான தங்களின் தொலைநோக்குப் பார்வைகளையும் யோசனைகளையும் முன்வைக்கும்.

வளர்ச்சியடைந்த பாரதம் இளம் தலைவர்கள் உரையாடல் - தேசிய இளைஞர் விழா 2025, மூன்று வெவ்வேறு துறைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களின் கூட்டம் நடைபெறும். 2025 ஜனவரி 11-12 தேதிகளில் தில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் தேசிய நிகழ்வில் பங்கேற்க சுமார் 3,000 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

வளர்ச்சியடைந்த பாரதம் கண்காட்சி: இது மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் மற்றும் மத்திய அமைச்சகங்களின் இளைஞர்கள் சார்ந்த முன்முயற்சிகளைக் காட்சிப்படுத்தும். இந்தியாவின் வளர்ச்சிப் பார்வையில் இளைஞர்கள் ஈடுபடுவதற்கு இது ஒரு சிறந்த தளத்தை வழங்கும்

முழு அமர்வுகள்: முன்னணி தேசிய மற்றும் உலகளாவிய வல்லுநர்கள் இளைஞர்களுடன் கருத்துரையாடல் மற்றும் பயிற்சி பட்டறைகளில் பங்கேற்பார்கள்.

இந்திய பாரம்பரியத்தின் கொண்டாட்டம்: பாரம்பரியத்தின் பெருமையை காக்கும் வகையில் வளர்ச்சி எனும் மகத்தான பகுதியாக இந்தியாவின் வளமான பாரம்பரியத்தை கொண்டாடும் கலாச்சார நிகழ்ச்சியும் இந்த விழாவில் அடங்கும்.

வளர்ச்சியடைந்த பாரதம் இளம் தலைவர்கள் உரையாடல் என்பது ஒரு திருவிழா என்பதை விட, இது இந்தியாவின் இளைஞர்களை நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் தீவிர பங்களிப்பாளர்களாக மாற்றும் இயக்கமாகும்.

# தேசபக்தர், தொலைநோக்குத் தலைவர் டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி





சென்னை, 24 நவம்பர் 2024: 1901-ம் ஆண்டு ஜூலை 6-ம் தேதி கொல்கத்தாவில் பிறந்த டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி, தேசபக்தர், கல்வியாளர், நாடாளுமன்றவாதி, அரசியல்வாதி மனிதாபிமானம் கொண்ட பன்முக ஆளுமை என பன்முக அடையாளங்களுடன் திகழ்ந்தார். கொல்கத்தா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும், கொல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதியுமாக திகழ்ந்த அசுதோஷ் முகர்ஜி அவரது தந்தை ஆவார். அவரது தந்தையிடம் இருந்து தேசியவாதத்தின் மரபைப் பெற்றார். இந்த வளர்ப்பு அவருக்கு இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தின் மீது ஆழ்ந்த மரியாதையையும் நவீன விஞ்ஞான சிந்தனையில் தீவிர ஆர்வத்தையும் ஏற்படுத்தியது. டாக்டர் முகர்ஜியின் கல்வித் திறமை சிறு வயதிலிருந்தே வெளிப்பட்டது. பிரசிடென்சி கல்லூரியில் சிறந்து விளங்கிய பிறகு, டிலிட் உட்பட சட்டம், இலக்கியத்தில் பட்டம் பெற்றார்.

இங்கிலாந்தில் இருந்தபோது, டாக்டர் சியாமா பிரசாத், பிரிட்டிஷ் பேரரசின் பல்கலைக்கழகங்களின் மாநாட்டில் கொல்கத்தா பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். ஒரு முக்கிய இந்திய கல்வியாளராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினராகவும், வல்லமைமிக்க பேச்சாளராகவும், மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவராகவும் டாக்டர் முகர்ஜி இருந்தார்.

"நான் உங்களுக்கு இந்திய அரசியலமைப்பைப் பெற்றுத் தருவேன் அல்லது அதற்காக என் உயிரைக் கொடுப்பேன்" என்ற அவரது பிரகடனம், அவரது அர்ப்பணிப்பைப் பறைசாற்றியது. அவர் காஷ்மீரில் காவலில் இருந்தபோது 1953-ல் இறந்தார். இந்த இழப்பு நாடு முழுவதையும் துக்கத்தில் ஆழ்த்தியது. தேசபக்திக்கும், தன்னலமற்ற சேவைக்கும் அடையாளமாக, சியாமா பிரசாத் முகர்ஜி திகழ்கிறார்.

# ஹைதராபாத்தில் ரூ.300 கோடி முதலீட்டுடன் புதிய தொழிலகத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வை நடத்தும் ரகு வம்சி ஏரோஸ்பேஸ் குழுமம்






சென்னை, 24 நவம்பர் 2024: ரகு வம்சி குழுமம் ஹைதராபாத்தை தலைமையகமாக கொண்டு வான்வெளி, பாதுகாப்பு, விண்வெளி, எண்ணெய் மற்றும் எரிவாயு மற்றும் மருத்துவ துறை ஆகியவற்றிற்கு உயர் துல்லியமான மற்றும் உயிரைக் காப்பாற்ற உதவுகின்ற நவீன சாதனங்களை தயாரித்து வழங்கி வருகிறது. இந்நிறுவனம் ஹைதராபாத்தில் அதன் புதிய நவீன, தொழிலக வளாகத்தை நிறுவுவதற்கான அடிக்கல்லை நாட்டியிருக்கிறது. புதிய பன்னாட்டு விமான நிலையத்திற்கு அருகே ரூ.300 கோடி முதலீட்டில் இந்த ஆலையை உருவாக்க இந்நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது. 15 ஒரிஜினல் எக்யூப்மென்ட் மேனுஃபேக்சரஸ் (ஓஈஎம்ஸ்) நிறுவனங்களுக்காக 15 பிரத்யேக உற்பத்தி பிரிவுகள் இந்த ஆலையில் இடம்பெறும். இந்த நவீன ஆலைக்கான கட்டிடப் பணிகள் தொடங்கும் நிகழ்வு இன்று சிறப்பாக நடைபெற்றது. தெலங்கானா மாநில அரசின் தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல், தொழில்துறை மற்றும் வர்த்தக துறையின் அமைச்சர் திரு. டி. ஸ்ரீதர் பாபு இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். தெலங்கானா மாநிலத்தின் விண்வெளி மற்றும் பாதுகாப்பு துறை இயக்குனர் திரு. பி ஏ. பிரவீன் மற்றும் டி எஸ் ஐ ஐ சி துணைத்தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர். ஈ. விஷ்ணு வரதன் ரெட்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். "எமது பயணத்தில் இன்றைய தின நிகழ்வு ஒரு முக்கிய மைல்கல்லாகும். உற்பத்தி பிரிவில் உயர்மேன்மை, நிலைப்புத்தன்மை மற்றும் புத்தாக்கம் மீது ரகு வம்சி குழுமம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பிற்கு எடுத்துக்காட்டாக திகழ்வதுடன், எமது செயல்பாட்டை மேலும் வலுப்படுத்துவதாகவும் இந்த நவீன தொழிலகம் அமையும். இந்த முதலீட்டின் மூலம் எமது உற்பத்தி செயல்பாடுகளையும் மற்றும் ஆர்&டி திறன்களையும் மேம்படுத்த நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். அத்துடன், அடுத்த 3 ஆண்டுகளில் 2000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதாக இவ்வளாகம் செயல்படும். மேலும் தெலங்கானா மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இத்தொழிலகம், சிறப்பான பங்களிப்பை வழங்கும்." என்று ரகு வம்சி குழுமத்தின் நிர்வாக இயக்குனர் திரு. வம்சி விகாஸ் கூறினார். இந்நிறுவனத்தின் எதிர்கால வளர்ச்சி இன்னும் அதிக நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளில், 35% -க்கும் அதிகமான சி ஏ ஜி ஆர் வளர்ச்சியினை இக்குழுமம் பதிவு செய்திருக்கிறது. ரூ.2,000 கோடிக்கும் அதிகமான தொகைக்கு ஆர்டர்களை வெற்றிகரமாகப் பெற்றிருக்கிறது. இந்த அதி விரைவான வளர்ச்சிக்கு ஆதரவளிக்க ஹைதராபாத்தின் பன்னாட்டு விமான நிலையத்திற்கு அருகே அமைந்துள்ள தெலங்கானா அரசின் வன்பொருள் பூங்காவில் 8 ஏக்கர் நிலத்தை ரகு வம்சி குழுமம் வாங்கியிருக்கிறது. இரண்டு இலட்சம் சதுர அடி பரப்பளவில் மூன்று கட்டிடங்களுடன் உருவாகும் இந்த நவீன தொழிலகத்திற்காக இந்நிறுவனம் ரூ.300 கோடியை முதலீடு செய்கிறது. இப்புதிய ஆலை வளாகத்தில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, அசெம்பிளி மற்றும் உற்பத்தி ஆகிய பிரிவுகள் பிரத்யேகமாக இடம்பெறும். தனது உலகளாவிய செயல்திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்காக முக்கியமான கூட்டாண்மைகள் வழியாகவும் மற்றும் ஐ டி பி ஏரோ (ஸ்பெயின்), ராவி கியர்ஸ் (யுஎஸ்ஏ), அதானி டிஃபென்ஸ் மற்றும் பார்ட் ஈஸ்ட் ரோபோட்டிக்ஸ் போன்ற உலகளாவிய தொழில்துறை பெருநிறுவனங்களோடு கூட்டு முயற்சிகளின் வழியாகவும் தனது உற்பத்தி திறன்களையும், ரகு வம்சி குழுமம் கணிசமாக விரிவாக்கியிருக்கிறது.

# ராணுவ தளபதி உபேந்திர திவேதி நேபாள பயணத்தை நிறைவு செய்தார்



சென்னை, 24 நவம்பர் 2024: நேபாளத்தில் 5 நாள் அரசு முறை பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி இன்று நாடு திரும்பினார். இந்தப் பயணம், இரு நாடுகளுக்கும் இடையில் வலுவான பாதுகாப்பு ஒத்துழைப்பு, கலாச்சார உறவுகள், பரஸ்பர மரியாதை ஆகியவற்றை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்தது. பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு, ஒத்துழைப்பு ஆகியவற்றை வளர்ப்பதில் இந்திய - நேபாள ராணுவங்களின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை இது எடுத்துக் காட்டுகிறது.

அவரது பயணத்தின் போது, திரு உபேந்திர திவேதி நேபாளத்தின் அரசியல், ராணுவ தலைவர்களுடன் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

ராணுவ தளபதியின் பயணத்தின் முக்கிய அம்சங்கள்:

நேபாள ராணுவ தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிட்டார்.

ஜெனரல் உபேந்திர திவேதி, நேபாள ராணுவத்தின் தளபதி ஜெனரல் அசோக் ராஜ் சிக்டெலை சந்தித்து, இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தார்.

சிவபுரியில் உள்ள நேபாள இராணுவ கட்டளை, பணியாளர் கல்லூரியில் எதிர்கால தலைவர்களுக்கு அறிவூட்டும் வகையில், "போரின் மாறிவரும் தன்மை" என்ற தலைப்பில் விரிவுரை வழங்கினார்.

பொக்காராவில் உள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்தில் நடைபெற்ற முன்னாள் படைவீரர்கள் பேரணியில் திரு உபேந்திர திவேதி கலந்து கொண்டார்.

இந்தப் பயணத்தின் முடிவுகள் பாதுகாப்பு ஒத்துழைப்பு, கலாச்சார பரிமாற்றம், பிராந்திய பாதுகாப்பு ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தும் வகையில் கூட்டு ஒத்துழைப்பில் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மோசடி விழிப்புணர்வு வாரம்: வேலை தேடல் அனுபவத்தைப் பாதுகாப்பதற்கான உதவிக்குறிப்புகள் மற்றும் கருவிகளைப் பகிர்ந்து கொள்கிறது

சென்னை, 24 நவம்பர் 2024: வேலை தேடலைத் தொடங்குவது உற்சாகமாகவும் சவாலாகவும் இருக்கும், குறிப்பாக பரந்த ஆன்லைன் நிலப்பரப்பில் செல்லும்போது. இருப்பினும், வேலை தேடுபவர்கள் பாதுகாப்பான வேலை தேடுதல் அனுபவத்தை உறுதிசெய்ய கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது முக்கியம். அவர்கள் வேலை இடுகைகளை ஆராய்வதன் மூலமும், சுவரொட்டியின் அடையாளத்தை சரிபார்ப்பதன் மூலமும், அவர்கள் பகிரும் தகவலை கவனத்தில் கொண்டும் இதைச் செய்யலாம்.

லிங்க்ட் இன் இந்தியாவின் சட்ட மற்றும் பொதுக் கொள்கைத் தலைவர் அதிதி ஜா கூறுகிறார், "வேலை தேடுபவர்கள் லிங்க்ட்இன் பக்கம் திரும்புகிறார்கள், ஏனெனில் இது சாத்தியமான முதலாளிகளுடன் இணைவதற்கும் புதிய தொழில் வாய்ப்புகளை ஆராய்வதற்கும் நம்பகமான இடமாகும். பாதுகாப்பான, தொழில்முறை தளத்தை பராமரிப்பதில் எங்களின் அர்ப்பணிப்பு என்னவென்றால், நாங்கள் ஏன் உறுப்பினர்களுக்கு இலவச சரிபார்ப்பை வழங்குகிறோம், மேலும் 99% போலி கணக்குகள் உங்களைச் சென்றடைவதற்கு முன்பே எங்கள் அறக்கட்டளைக் குழு அயராது உழைக்கிறது.

உங்கள் வேலை தேடலின் போது உங்களைப் பாதுகாத்துக் கொள்ள உதவும் சில அத்தியாவசிய உதவிக்குறிப்புகள் மற்றும் கருவிகள்:

1. வேலை இடுகைகள் பற்றிய சரிபார்க்கப்பட்ட தகவலைச் சரிபார்க்கவும்: வேலை இடுகையில் ஒரு சரிபார்ப்பு பேட்ஜ் என்றால் நிறுவனம் அல்லது வேலை போஸ்டர் பற்றிய சரிபார்க்கப்பட்ட தகவல் உள்ளது. சுவரொட்டி அதிகாரப்பூர்வ நிறுவனப் பக்கத்துடன் இணைக்கப்பட்டிருந்தால், ஒரு குறிப்பிட்ட பணியிடத்துடன் அவர்களின் தொடர்பைச் சரிபார்த்திருந்தால் அல்லது எங்கள் அடையாளச் சரிபார்ப்பு கூட்டாளர்களில் ஒருவர் மூலம் அவர்களின் அடையாளத்தைச் சரிபார்த்திருந்தால் இதில் அடங்கும்.

2.நீங்கள் பகிர்வதில் கவனமாக இருங்கள்: உங்களிடம் என்ன தனிப்பட்ட தகவல் கேட்கப்படுகிறது என்பதைக் கவனியுங்கள். ஆன்போர்டிங் செயல்முறைக்கு முன் ஒருபோதும் வங்கி விவரங்களை வழங்க வேண்டாம்.

3.சந்தேகத்திற்கிடமான கோரிக்கைகளுக்கு "இல்லை" என்று கூறுங்கள்: முறையான முதலாளிகள் விரும்பாத தந்திரங்களை மோசடி செய்பவர்கள் பயன்படுத்தலாம், நேர்காணலுக்காக மறைகுறியாக்கப்பட்ட மென்பொருளைப் பதிவிறக்கம் செய்வது அல்லது சிறிய வேலைக்கு அதிக ஊதியத்துடன் வேலைகளை வழங்குவது போன்றவை. ஒரு தொலைநிலை நேர்காணலுக்குப் பிறகு வேலை வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே ஒரு முறையான ஒப்பந்தமாகும். ஸ்பேம் மற்றும் பொருத்தமற்ற உள்ளடக்கத்தைப் புகாரளிக்கலாம்.

4. செய்தி எச்சரிக்கைகளை இயக்கு: தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தை லிங்க்ட்இன் இன் விருப்பமான தானியங்கு கண்டறிதலை இயக்குவதைக் கருத்தில் கொள்ளுங்கள், இது தீங்கு விளைவிக்கும் மோசடிகளைக் கண்டறியலாம்.

5. சிவப்புக் கொடிகளைத் தேடுங்கள்: உண்மையாக இருப்பதற்கு மிகவும் நன்றாக இருக்கும் அல்லது முன்கூட்டியே பணம் செலுத்த வேண்டிய வேலை இடுகைகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். பொதுவான மோசடிகளில் மர்மமான கடைக்காரர், நிறுவனத்தின் ஆள்மாறாட்டம் செய்பவர் அல்லது தனிப்பட்ட உதவியாளர் போன்ற பாத்திரங்கள் அடங்கும். கூடுதலாக, பணம், கிரிப்டோகரன்சி, பரிசு அட்டைகள் அல்லது முதலீடு செய்ய யாரேனும் உங்களிடம் கேட்பது குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.

6.சரிபார்ப்புகளுடன் வேலைகள் மூலம் வடிகட்டவும்: சரிபார்ப்புகளுடன் கூடிய வேலைகளை மட்டும் காட்ட, இப்போது உங்கள் வேலை தேடலை வடிகட்டலாம். சரிபார்க்கப்பட்ட லிங்க்ட்இன் பக்கம் மற்றும் அந்த நிறுவனங்களுடன் தொடர்புடைய தற்போதைய வேலை சுவரொட்டிகளைக் கொண்ட நிறுவனங்கள் இடுகையிடும் வேலைகளை பிரத்தியேகமாக தேட வடிகட்டி உங்களை அனுமதிக்கிறது. மாறும்போது, இந்தச் சரிபார்ப்புகளுடன் கூடிய வேலைகள் மட்டுமே உங்கள் தேடல் முடிவுகளில் தோன்றும், மேலும் தேடல் தலைப்பில் வடிப்பான் தெரியும்.

7. உள்ளடக்க உருவாக்குநர்கள் வேலை தேடுபவர்களை உண்மையான ஆலோசனையுடன் ஆதரிக்கலாம்: பல வேலை தேடுபவர்கள் தொழில் ஆலோசனை மற்றும் உத்வேகத்திற்காக சரிபார்க்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் சிறந்த குரல்கள் போன்ற நம்பகமான குரல்களை லிங்க்ட் இனில் பயன்படுத்துகின்றனர். ஆர்கானிக் அல்லது ஸ்பான்சர் செய்யப்பட்ட உள்ளடக்கத்தை மதிப்பாய்வு செய்யும் போது, ஆட், ஸ்பாண்சர்ட் அல்லது பார்ட்னர் போன்ற தெளிவான லேபிள்களை கட்டண கூட்டாண்மைகளின் குறிகாட்டிகளாகப் பார்க்கவும். படைப்பாளிகள் தங்கள் ஒப்புதல்களில் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த, பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் இயங்குதள வழிகாட்டுதல்களுக்கு இணங்குமாறு நாங்கள் ஊக்குவிக்கிறோம்.

வேலை தேடல் செயல்பாட்டில் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. சரிபார்ப்புக்கு முன்னுரிமை அளிப்பது, தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்தல் மற்றும் சந்தேகத்திற்கிடமான கோரிக்கைகளுக்கு விழிப்புடன் இருப்பது உங்கள் தேடலைப் பாதுகாப்பதில் முக்கியமாகும். லிங்க்ட் இன் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலமும், இந்த உதவிக்குறிப்புகளைப் பின்பற்றுவதன் மூலமும், வேலை தேடுபவர்கள் தங்கள் பாதுகாப்பை மேம்படுத்தலாம் மற்றும் புதிய தொழில் வாய்ப்புகளைத் தொடரும்போது தகவலறிந்த முடிவுகளை எடுக்கலாம். லிங்க்ட் இன் சுற்றுச்சூழல் அமைப்பு முழுவதும் நம்பகத்தன்மை சிக்னல்களை நாங்கள் தொடர்ந்து ஒருங்கிணைத்து, உங்கள் வேலை தேடலை நம்பிக்கையுடன் நடத்த உதவுகிறது.

# பாலின அடிப்படையிலான வன்முறைகளை ஒழித்தலுக்கான தேசிய இயக்கத்தை அமைச்சர் அன்னபூர்ணா தேவி நாளை தொடங்கி வைக்கிறார்

சென்னை, 24 நவம்பர் 2024: மத்திய பெண்கள்-குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி நாளை (25.11.2024) புதுதில்லி ஆகாஷவாணி அலுவலகத்தில் உள்ள ரங் பவனில் அபி கோய் பஹானா நஹி என்ற தேசிய இயக்கத்தைத் தொடங்கி வைக்க உள்ளார். மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சவுகான், ஊரக வளர்ச்சி, தொலைத் தொடர்புத் துறை இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

பாலின அடிப்படையிலான வன்முறைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க பொதுமக்கள், அரசு, சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கும் இந்த இயக்கம், ஐநா ஆதரவுடன் நடத்தப்படுகிறது. இது பெண்கள்- குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும். கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் தலைமையிலான 'நயி சேத்னா 3.0 இயக்கத்துடன்' இந்த இயக்கம் தொடங்கப்படுகிறது. பாலின அடிப்படையிலான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைக்கான அழைப்பை பரவலாக பரப்புவதை உறுதி செய்வதற்காக, இது நடத்தப்படுகிறது.

உலகளவில், ஒவ்வொரு ஆண்டும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினமான நவம்பர் 25 முதல் மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10 வரை, பாலின அடிப்படையிலான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 16 நாட்கள் செயல்பாட்டு இயக்கம் கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு, நோ எக்ஸ்கியூஸ் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இது நடத்தப்படுகிறது.